IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 145/2009

P.W.1 - SANTHI, W/O. THIRUNAVIKKARASU

DATE - 01.04.2024

வா .சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்த வழக்கு 145/2009 என்றால் சரிதான், முனிசாமி தாக்கல் செய்த அ.வ.எண்.30/2012 என்ற வழக்கில் நான் 28ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் இல்லத்தரசியாக இருக்கிறேன். வருமான வரி ஏதாவது செலுத்துகறேனா என்றால் ஆமாம். எந்த வருடம் முதல் செலுத்தி வருகிறேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொத்து வாங்கியதாக கூறியுள்ளது குறித்து யாரிடமிருந்து அந்த சொட்தை வாங்கினேன் என்றால் சசிகலா என்பவரிடமிருந்து 1997ம் ஆண்டில் 7ம் மாதத்தில் வாங்கினேன். எத்தனை சதுரடி வாங்கினேன் என்றால் 2 பத்திரமாக வாங்கினேன். இரண்டு பத்திரத்திலும் குறிப்பிட்டுள்ள சொத்து மொத்தம் சுமார் 60 செண்ட் இருக்கும். தாவா சொத்து முழுவதையும் நான் சசிகலாவிடமிருந்து தான் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி சசிகலா யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் கஸ்தூரி அம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் அந்த மூல பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த மூல பத்திரத்தின் அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்தெந்த சர்வே

எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றேன் என்று என்னால் சொல்லா இயலுமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 60 செண்ட் நிலம் இல்லை என்றால் 60 செண்டில் பிரச்சனை இல்லை என்பதாலும் ஒரு 25 அல்லது 30 செண்டில் மட்டும் பிரச்சனை என்பதால் பிரச்சனை உள்ள சொத்தை மட்டும் தான் இவ்த வழக்கில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளேன். எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு செண்டில் பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள 2 அட்டவனை சொத்துகளை எந்த சொத்தை எவ்வளவு விலைக்கு வாங்கினேன் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தை யார் முன்னின்று வாங்கி கொடுத்தார்கள் என்றால் நான் நேரடியாக தான் கிரையம் பெற்றேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி கோரிக்கையின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

P REVATHY

Digitally signed by P REVATHY